**‘இழப்பதற்கு எதுவும் இல்லை’ தானா?**
**த.ஜெயசீலன்.** (18.03.2021)

சுமார் 60 ஆண்டுகளுக்கு முன்பே தனது இளவயதில் மரபுக் கவிதைகள் புனைவதில் ஆர்வம் காட்டிய மூத்த படைப்பாளி அன்பர் **தேவி பரமலிங்கம்** அவர்களின் இலக்கியப் பணி சிறுகதை, , கவிதை, வானொலி நாடகங்கள், நாவல், பத்தி எழுத்து, விமர்சனம் எனப் பல் கிளை விட்டு வளர்ந்து செழித்துள்ளமை யாவரும் அறிந்ததே. இவரின் பல கவிதைகள் ஈழத்தின் அநேகமான பத்திரிகைகளில் பிரசுரிக்கப்பட்டுள்ளன. இவர் **‘நவாலியூரீர் கவிராயர்’** என்ற புனைபெயரில் தனது எண்பத்தொரு வயதிலும் இன்றும் இயங்கிக் கொண்டிருப்பது இவரின் இலக்கிய ஆளுமையையும் படைப்பு ஊக்கத்தையும் ஆர்வத்தையும் காட்டுகின்றது.

ஓசைச் சிறப்பு ஒழுங்குடைய சந்தக் கவிதைகளில் அதிக ஈடுபாடு காட்டும் இவர் புதுக்கவிதைகளையும் எழுதியிருக்கிறார் என்பது இவர் இக் காலமாற்றத்தை ஏற்கத் தயங்கவில்லை என்பதையும் புதுமையை மறுதலிக்கவில்லை என்பதையும் எடுத்துக் காட்டுகிறன. புதுக் கவிதைகளுக்கு ‘பழதை’ என்ற பெயரை எழுபதுகளில் முன்மொழிந்து அது இன்னமும் அறிவுலகத்தால் வழிமொழியப் படவில்லையே என இன்றுவரை காத்திருப்பது அவர் குரல்வழி கேட்கிறது.

கவிஞரின் ‘புஸ்ரீமணி’என்ற சிறுவர் கவிதை நூல் ஏற்கனவே வெளிவந்துள்ள நிலையில் ‘இழப்பதற்கு எதுவும் இல்லை’என்ற மரபுக் கவிதைகளினை அதிகம் கொண்ட இத் தொகுப்பு கொரோனா சூழ் வேளையிலும் ‘கிருபா லேணோர்ஸின்’ ஒத்துழைப்புடன் 2020 இன் இறுதிப் பகுதியல் வெளிவந்திருக்கிறது. இவரின் ‘இனியொரு புஸ்ரீமி எழுந்து வரட்டும்’ என்ற கவியரங்கக் கவிதைகளின் தொகுப்பும் ‘கத்தி இனிப் பயனில்லை’என்ற புதுக் கவிதைத் தொகுப்பும் விரைவில் வெளிவர இருப்பதும் முக்கியமானது.

இன்றைய இளைய தலைமுறையினரே வாசிப்பு, எழுத்து என்பவற்றை விட்டு தூர விலகிச் செல்கின்ற இக்காலத்தில் மனதளவில் இளைஞராக நின்று இன்றும் இம் முயற்சிகளில் இவர் ஈடுபடுவதும் இவரின் நாவல், சிறுகதை, பத்தி எழுத்து, இலக்கிய ஆய்வுக்கட்டுரைகள் போன்ற மூன்று நூல்கள் விரைவில் வெளிவர இருப்பதும் இவரின் பல் பரிமாண ஆளுமைச் சிறப்புக்கும் இடையறாத இவரின் இயங்குகைக்கும் எடுத்துக் காட்டு என்றால் மிகையாகாது.

இவர் ‘நவாலியூரீர் கவிராயர்’ என்ற புனைபெயரில் ‘இழப்பதற்கு எதுவும் இல்லை’என்ற நூலைப் படைத்தளித்துள்ளார். சிறியதும் பெரியதுமான 52 கவிதைகளில் பெரும்பாலும் ஓசை ஒழுங்கமைந்த மரபுக் கவிதைகளை உள்ளடக்கியிருக்கிறது ‘இழப்பதற்கு எதுவும் இல்லை’.

இவரின் கவிதைகளின் அடிநாதம் மனிதநேயமும் மானிட அடக்கு முறைகளுக்கு எதிரான ஓயாத ஒடுங்கியடங்காத கோபக் குரலும் எனலாம்.

**“ஆரையும் ஆர்க்கும் அடிமையென் றில்லாமல்**

**அனைத்தையும் அனைவரும் பெறல் புதுத் தத்துவம்”**

என்று தனது கவிதைக் கோட்பாட்டை இவர் பிரகடனப்படுத்தியுள்ளார்.

மேலும்,

**“நாளை மாறும் நவ யுகத்தில்**

**நாளும் புதுமை இன்னும் இன்னும்**

**வேளைக் கெங்கள் பிள்ளை கட்கு**

**மேலும் தோன்றிப் பலன ளிக்கும்”**

என்று நம்பிக்கைக் கொள்கிறார்.

என்றாலும் ஒரு உழைப்பாளியாக உழைக்கும் வர்க்கத்தின் உரத்த ஒற்றைக் குரலாக ஒலிக்கும் இவரின் பல கவிதைகளில் ஒன்றான சற்று நீண்ட ‘போரிட்டு வென்ற நாள் மேதினம்’என்ற கவிதை

**“சிக்காக்கோ நகரத்தை சிவப்பென ஆக்கியே**

**சிகரத்து எழுந்த மேதினம்**

**திக்கெலாம் உழைக்கும் தொழிலாளர் மேவிடும்**

**தினமதாய் துலங்கு மேதினம்”**

எனப் பேசுகிறது.

உழைப்பே உயர்வு தரும் என நம்பும் இவரின் முடிவை மெய்ப்பிப்பதாக

**“உழைப்பினிது களைப்பினிது என்பேன்”** எனும் வரிகள் நிமிர்கின்றன.

தமிழ் மீது கொண்ட இவரின் பற்று தமிழ் “செம்மொழி” அந்தஸ்த்துப் பெற்றது கண்டு இவ்வாறு பாடி மகிழ்கிறது

**“பிழையில்லா தமிழினத்து புலவர்களின்**

**விற்பனம் விகடகவி வரகவிகள்**

**சுளையாகப் பன்னூல்கள் கொண்டதெம்**

**செம்மொழித் தரமெய்திய தமிழ் மொழியே”** என்றவாறு!

**“எத்தினையோ சாதி மதம் தோன்றினாலும்**

**அத்தனையும் ஒன்றிருந்து தோன்றின**

**என்பதை ஏற்றுக் கொண்டால்**

**எங்கிருக்கும் ஏற்றத் தாழ்வு?** என சமூக ஏற்றத் தாழ்வின் ரிஷி மூலத்தை இவர் நோண்டியும் பார்க்கிறார்.

**“மிச்சமாகத் துலங்குகின்ற கலாசாரம்**

**மிதிபடாமல் காப்பதற்குச் சிந்தியுங்கள்”**

என்று உலகிற்கும் போலி ஆன்மீக வாதிகளுக்கும் பொறுப்பற்ற அடியவர்களுக்கும் உண்மையுரைக்கிறார்.

**“சினிமாவைக் கெட்டதெனச் சொல்ல வில்லை**

**சினிமாதான் நல்லதென்றும் சொல்ல வில்லை”** என சமூகவாதியாகவும் பேசுகிறார்.

‘இழப்பதற்கு எதுவும் இல்லை’ என்ற முத்தாய்ப்புக் கவிதையில்

**“சாணொன்று ஏற முளம் சறுக்கு கின்ற**

**சால்பதுதான் எங்களது வாழ்க்கை என்றும்**

**பாணதனைத் தின்று உடல் சாயு கின்ற**

**பாங்கதிலே இன்னுமுயிர் பிடித்து வைத்து**....”என பாட்டாளிகளின் ‘பாட்டை’ சீரான எண்சீர் விருத்தத்தில் பாடுகிறார்.

**“தீரமொடு சண்டையிட்ட செருக்களத் தாலே**

**தீரா வடு வந்து சேர தீவினையென் மாதோ?** என போரையும் போரின் பின்னான இன்றைய எமது நிலையையும் கூட எண்ணிக் குமுறுகிறார்.

தனது கவிதைகளின் ஊடாக போரின் துயரங்கள், இன்றும் குறையாத சமூக அவலங்கள் அடக்குமுறைகள், யதார்த்தப் பிரச்சனைகள், தமிழர்களின் இன அவலம், அரசியல் சார்ந்த வன்மங்கள் என எங்கு மனிதம் வதையுறுகிறதோ அங்கெல்லாம், அவை எல்லாம் பற்றி, தன் கவிதைகளினூடாக தனது மனக் குறை குமுறல்களை , மன அவசங்களையெல்லாம் இறக்கிவைக்க முனைகிறார் கவிஞர்.

'தமிழ் மூலம் வாழ்ந்திட வழிபிறக்கும்', 'சந்தி சிரிக்கும் தம்பி', 'முப்பத்தொரு குருநகர் முப்பரி மாணம்', 'கடவுளைப் படைத்த மனிதன்', 'வீரம் நிறைந்த தமிழினமே சோரம் போகலாமா?' 'சுதந்திரம் மக்களுக்கே','இருதயம் கல்லோ', 'இழப்பதற்கு எதுவும் இல்லை', 'விளையும் கேடு'இ 'ஆசைக்கடலில்' போன்ற கவிதைகளை அவரது நிலைப்பாட்டிற்கு பதச் சோறுகளாக கூறலாம்.

தன்னுடைய நேரடி அனுபவங்களைப் பகிர்ந்து அதிகம் சோடனைகள் இல்லாத, கவிதைக்குரிய சில பண்புகளை பற்றி அதிகம் அலட்டிக் கொள்ளாத, அதிகம் ஓசை வசப்பட்டவையாக, மிகவும் எளிய நடையுடையவையாக, இருண்மைத் தன்மையற்றவையாக, தனது கவிதைகளை இவர் படைத்தளித்திக்கிறார். இவரின் கவிதைகளில் உணர்ச்சியின் தன்னுணர்வின் தாக்கம் ஆதிக்கம் அதிகம் எனலாம். மனதில் பட்டதை பட்டென்று பாடும் படபடப்பு மிகுந்தவையாக அவரின் பல கவிதைகள் விளங்குகின்றன.

தனது மன ஏக்கங்களை தீர்க்க தான் என்ன செய்ய முடியும் என்ற இடையறாத கேள்விகளே 'இழப்பதற்கு எதுவும் இல்லை' என்ற தொகுப்பின் தலைப்பாக அனுபவ முடிவாக தொக்கி நிற்கிறதோ என எண்ணத் தோன்றுகிறது. தன் நேரடி அனுபவங்களை எளிமையான தனது வார்த்தைகளுக் கூடாக வசப்படுத்தி ஒத்திசைவான வரிகளை அடுக்கி ஒலிகூட்டி ஒருசில கவிதை வடிவுகளுள் கொண்டுவர இவர் முயன்றிருப்பதனை காணமுடிகிறது. கவிதைப் பரப்பில் மிகச் சவாலான வடிவமான 'வெண்பாவை' ஒத்த அமைப்பை 'ஏந்தல் நிலைக்கு ஏது' என்ற கவிதையில் பயன்படுத்தியி ருக்கிறார்.

தான் வாழும் தான் காணும் சமூகத்தின் குறைபாடுகளையும், மதத்தின் மொழியின் சாதியின் இனத்தின் பெயரால் நடக்கின்ற அட்டூளியங்களையும் அவலங்களையும் அராஜகங்களையும், பொதுவான சராசரி மனிதர்களின் சுயநல நோக்கங்களையும், அதனை அடைய அவர்கள் மேற்கொள்ளும் குறுக்கு வழிப் போராட்டங்களையும் போடும் வேடங்களையும் முயலும் முயல்வுகளையும், கண்டு வெதும்பி தனது ஈடேறா ஏக்கங்களை நினைந்து யதார்த்த வாழ்வு போடும் இன்னோரன்ன தடைகளை தாண்ட முடியாத இயலாமையை எண்ணி நொந்து நெஞ்சு பொறுக்காது நின்று தன் உணர்ச்சிகளை மழையாக பொழிய முனையும் ''இழப்பதற்கு எதுவும் இல்லை'' எனும் நூலிலுள்ள கவிதைகள் ''அப்படி இல்லை பொறுத்தது போதும் இனி பொங்குவதே ஒரே வழி'' என்ற மனப்பாங்கினை எடுத்துக் காட்டுவனவாகவே அமைகின்றன.

மிக நீண்ட காலம் ஈழத்து இலக்கியத் துறையில் தடம்பதித்து பல துறைகளில் தனது முத்திரையைப் பதித்திருக்கும் அன்பர் தேவி பரமலிங்கம் ஐயா அவர்களின் முழுமையான கவிதை முகத்தை இத்தொகுதியில் யாவரும் தரிசிக்க முடியும் என்பதையும் அவரின் கவிதையாற்றலை அளக்கும் அளவுகோலாக இத்தொகுதி விளங்கும் என்பதையும் பதிவு செய்வதோடு இவரின் கலைப் பணிகள் மேலும் தொடர எனது பாராட்டுக்களையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துப் பணிகின்றேன்.